[2022] 1 எஸ்.சி.ஆர்.1163

இந்திய உச்சநீதிமன்றம்

பிப்ரவரி 01, 2022

மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர்.ஷா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. பி.வி.நாகரத்னா

(குற்றவியல் மேல்முறையீடு எண். 34/2022)

உ.பி மாநிலம் .... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

வீர்பால் மற்றும் ஒருவர் ...எதிர் மேல்முறையீட்டாளர்

சாட்சிய சட்டம், 1872 – பிரிவு 32 - மரண வாக்குமூலம் - மதிப்பிடல் – நடுவரால் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தில் பணம் கேட்டதில் ஏற்பட்ட பகை காரணமாக, இறந்தவர் மீது எதிரிமனுதாரர்கள்/எதிரிகள் மண்ணெண்ணெய் ஊற்றி எரித்தனர் என குறிப்பிட்டு கூறியுள்ளார் – சங்கதிகளின் படி, நடுவரால் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தை சந்தேகிக்க எந்த காரணமும் இல்லை - மார்பில் எந்த காயங்களும் இல்லாமல், தலை மற்றும் பின்புறத்தில் மட்டுமே காயங்கள் காணப்பட்டன என்ற மருத்துவ சாட்சியத்துடன் மரண வாக்குமூலத்தில் உள்ள வாசகங்கள் ஒத்து உள்ளன – இறந்தவர் மீது யாரோ பின்னால் இருந்து மண்ணெண்ணெய் ஊற்றினால் மட்டுமே, அத்தகைய தலை மற்றும் பின்புற காயங்கள் ஏற்படுவதற்கான சாத்திய கூறுகள் உண்டு – மரண வாக்குமூலம் அளிக்கும் போது முழு நினைவுடன் இருந்தார் என இறந்தவரின் இறப்பிற்கு முன்னர் சிகிச்சை அளித்த மருத்துவர் சான்றளித்துள்ளதன் மூலம் மரண வாக்குமூலத்தின் சாட்சிய மதிப்பு மேலும் அதிகரித்துள்ளது – எதிரிகளை விடுவிப்பதில் உயர் நீதிமன்றம் தவறு செய்துள்ளது – தண்டனைச் சட்டம், 1860 – பிரிவு 302 உ/இ பிரிவு 34.

சாட்சியம் – மரண வாக்குமூலம் – சாட்சிய மதிப்பீடு – வேறு உறுதிபடுத்துதல் இல்லாமல், மரண வாக்குமூலத்தை மட்டுமே அடிப்படையாக கொண்டு தண்டனை வழங்கலாம்.

மேல்முறையீட்டை அனுமதித்து நீதிமன்றம் தீர்மானித்தது :

1. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மரண வாக்குமூலத்தை பதிவு செய்வதில் சார்புடையவராகவோ அல்லது ஆர்வமாகவோ இருந்ததாகவோ குற்றவியல் நடுவர்/எஸ்டிஎம்-க்கு எதிராக எந்தவித புகாரும் பதிவு செய்யப்படவில்லை. விசாரணையின் போது அவர் அழைக்கப்பட்டுள்ளார் மற்றும் புலன் விசாரணையின் போது அவர் இறந்தவரின் மரண வாக்குமூலம் மற்றும் அறிக்கையை பதிவு செய்துள்ளார். உயர்நீதிமன்றம், குற்றவியல் நடுவர்/எஸ்டிஎம் தீங்கிழைக்கும் அடிப்படையில் மரண வாக்குமூலத்தை பதிவு செய்தார் என்ற வகையில் கூட, அதன் நம்பகத்தன்மையை சந்தேகிக்கவில்லை. குற்றவியல் நடுவர்/எஸ்டிஎம் பதிவு செய்த மரண வாக்குமூலத்தை நம்பாமல் இருந்ததற்கு உயர்நீதிமன்றம் கூறியுள்ள காரணம் உகந்தது அல்ல, அதை ஏற்க முடியாது. 22.12.2011 அன்று நடுவரால் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தை சந்தேகிக்க எந்த காரணமும் இல்லை, அதில், காலை 11:00 மணியளவில் பணம் கேட்பதில் ஏற்பட்ட பகை காரணமாக, எதிர் மனுதாரர்கள் / குற்றம் சாட்டப்பட்டவர்கள் இறந்தவர் மீது மண்ணெண்ணெய் ஊற்றி எரித்ததாக இறந்தவர் குறிப்பிட்டு கூறியுள்ளார். எனவே 22.12.2011 அன்று நடுவரால் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர்கள்/குற்றம் சாட்டப்பட்டவர்கள் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளனர், மற்றும் இறந்தவர் மீது மண்ணெண்ணெய் ஊற்றியதாக குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது. (பத்தி 10)

2. மருத்துவ சான்றுகள் மற்றும் இறந்தவருக்கு ஏற்பட்ட காயங்களை கருத்தில் கொண்டாலும், இறந்தவருக்கு தலை மற்றும் பின்புற காயங்கள் மட்டுமே காணப்பட்டன, மார்பில் எந்த காயமும் இல்லை. விசாரணை நீதிமன்றம் சரியாக குறிப்பிட்டுள்ளது போல், இறந்தவர் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டிருந்தால் அவரது நெஞ்சில் காயங்கள் இருந்திருக்கும், அதோடு தலையிலும் பின்பக்கத்திலும் காயங்கள் இருந்திருக்காது. எங்கள் பார்வையில், இறந்தவரின் உடலில் காணப்படும் இத்தகைய காயங்கள் இறந்தவரின் பின்னால் இருந்து யாராவது மண்ணெண்ணெய் ஊற்றினால்

மட்டுமே சாத்தியமாகும். மேற்கூறிய அம்சம் உயர்நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்படவில்லை. (பத்தி 10)

3. வேறு சாட்சியத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படாமல், மரண வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டுமே தண்டனை வழங்கலாம்.(பத்தி 10.1)

4. கு.ந.மு.ச. பிரிவு 161 இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலத்தில் குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர் இறந்த நபரால் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றாலும், இறந்தவரது மரண வாக்குமூலத்தில் தீயிட்டு கொளுத்தியதாக அவரது பெயர் இடம் பெற்றுள்ளதை நாங்கள் கவனித்தோம். கு.ந.மு.ச. பிரிவு 161 இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலத்திலும், தன்னைக் கொல்லும் நோக்கத்தில் தனது மாமனார் தன்னைக் கட்டையால் தாக்கியதாகவும், அதன் விளைவாக, அறைக்குள் தன்னைப் பூட்டிக்கொண்டு தீக்குளித்ததாகவும் இறந்தவர் கூறியுள்ளார். எனவே, இறந்தவரின் வாக்குமூலத்தில், குற்றம் சாட்டப்பட்ட எதிரி/எதிர்மனுதாரர்களால் அவர் தாக்கப்பட்டார் என்ற பொதுவான இணைப்பு உள்ளது. மேலும், மார்பு, வயிறு மற்றும் பின்புறம் தவிர உடலின் அனைத்து பாகங்களிலும் தீக்காயங்கள் இருந்ததை வெளிப்படுத்தும் மருத்துவ சான்றுகளுடன் இறந்தவர் அளித்த மரண வாக்குமூலம் ஒத்துப்போகிறது. அத்தகைய பாகங்களில் உள்ள தீக்காயங்கள் இறந்தவரைத் தவிர வேறு ஒருவர் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்ததன் விளைவாக மட்டுமே ஏற்பட கூடியதாகும். ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, இறந்தவர் தன்னைத்தானே தீ வைத்துக்கொண்டால், அவரது மார்பு எரிந்திருக்க வேண்டும். மருத்துவச் சான்றுகள் மரண வாக்குமூலத்துடன் ஒத்துள்ளது, இதன் காரணமாக இந்நீதிமன்றம் மரண வாக்குமூலத்தை சார்ந்திருக்க அனுமதிக்கிறது.(பத்தி 10.2)

5. இறந்தவரின் மரண வாக்குமூலத்தில் வைக்கப்பட வேண்டிய அளவு மற்றும் நம்பகத்தன்மை குறித்து விசாரணை நீதிமன்றம் சரியாகக் கவனித்துள்ளது. இறந்தவரின் மரண வாக்குமூலத்தை உயர் நீதிமன்றம் புறக்கணிக்க எந்த காரணமும் இல்லை. உட்கோட்ட நடுவர் (உ.கோ.ந) பால் கிஷன் அகர்வாலிடம் இறந்தவரால் மரண வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது. இவர் விசாரணை நீதிமன்றத்தில் ஒரு அரசு தரப்பு சாட்சியாகவும் (அ.சா.6) விசாரிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இறந்து போனவர் வாக்குமூலத்தை அளிக்கும் போது, முழு நினைவோடு இருந்ததாகவும், வாக்குமூலம் பதிவு செய்த அதிகாரி முன்வைத்த கேள்விகளைப் புரிந்துகொள்ளும் திறன் கொண்டவராகவும்

இருந்தார் என்பதை அவரது அறிக்கை வெளிப்படுத்துகிறது. இறந்தவர் முழு சுயநினைவுடன் இருந்ததாக, இறப்பதற்கு முன் அவருக்கு சிகிச்சை அளித்து வந்த மருத்துவரின் சான்றிதழுடன் உள்ளதால் மரண வாக்குமூலத்தின் சாட்சிய மதிப்பு மேலும் அதிகரிக்கிறது. அத்தகைய வாக்குமூலத்தை அளிக்கும் போது இறந்தவரின் உடல்நிலை குறித்து மருத்துவர் அளித்த அறிக்கைகளை கருத்தில் கொண்டு, விசாரணை நீதிமன்றம் மரண வாக்குமூலத்தை சரியாக நம்பியுள்ளது. தீய எண்ணத்தால் தூண்டப்படமுடியாத தனிப்பட்ட சாட்சிகளான உ.கோ.நடுவர் மற்றும் மருத்துவரின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை மேலும் வலுப்படுத்தியுள்ளதாக விசாரணை நீதிமன்றம் சரியாக குறிப்பிட்டுள்ளது. (பத்தி 10.2)

6. 22.12.2011 அன்று எஸ்.டி.எம்/ குற்றவியல் நடுவர் பதிவு செய்த மரண வாக்குமூலத்தை கருத்தில் கொண்டு, குற்றம் சாட்டப்பட்டவர்கள் எதற்காக அவர்கள் விசாரிக்கப்பட்டார்களோ அதற்காக தண்டிக்கப்படலாம். எனவே, குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிப்பதில் உயர்நீதிமன்றம் பெரும் தவறு செய்துவிட்டது. இ.த.ச. பிரிவு 302 உடன் இணைந்த பிரிவு 34 ன் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களுக்காக குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவித்து உயர்நீதிமன்றம் வழங்கிய எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவு நீடிக்க முடியாதது. மேலும், இது ரத்து செய்யப்படுவதற்கும், நீக்கரவு செய்யப்படுவதற்கும் தகுதியானது. (பத்தி 11)

> *முன்னு ராஜா மற்றும் ஒருவர் -எதிர்- மத்தியபிரதேசம் மாநிலம்* (1976) 3 **எஸ்.சி.சி** 104:[1976] 2 **எஸ்.சி.ஆர்** 764; *பனிபென் (திருமதி) -எதிர்- குஜராத் மாநிலம்* (1992) 2 **எஸ்.சி.சி** 474 : [1992] 2 **எஸ்.சி.ஆர்** 197; *உத்தரபிரதேசம் மாநிலம் -எதிர்- ராம் சாகர் யாதவ் மற்றும் பலர்* (1985) 1 **எஸ்.சி.சி** 552 : [1985] 2 **எஸ்.சி.ஆர்** 621; *ரமாவதி தேவி -எதிர்- பீகார் மாநிலம்* (1983) 1 **எஸ்.சி.சி** 211 மற்றும் *குஷால் ராவ் -எதிர்- பம்பாய் மாநிலம்*, **ஏ.ஐ.ஆர்** 1958 **எஸ்.சி.**22 : [1958] **எஸ்.சி.ஆர்** 552 – சார்வுற்றது.

> *ரவி சந்தர் மற்றும் பலர் -எதிர்- பஞ்சாப் மாநிலம்* (1998) 9 **எஸ்.சி.சி** 303; *ஹர்ஜித் கவுர் -எதிர்- பஞ்சாப் மாநிலம்* (1999) 6 **எஸ்.சி.சி** 545; *கோலி சுனிலால் சவ்ஜி மற்றும் ஒருவர் -எதிர்- குஜராத் மாநிலம்* (1999) 9 **எஸ்.சி.சி** 562 : [1999] 3 (**துணை**) **எஸ்.சி.ஆர்** 284; *விகாஸ் மற்றும் பலர் - எதிர்- மகாராஷ்டிரா மாநிலம்* (2008) 2 **எஸ்.சி.சி** 516 : [2008] 1 **எஸ்.சி.ஆர்**

933; *லக்ஷ்மண் -எதிர்- மகாராஷ்டிரா மாநிலம்* (2002) **6 எஸ்.சி.சி 710**: *ஜக்பீர் சிங் -எதிர்- மாநிலம் (தேசிய தலைநகர் டெல்லி)* (2019) **8 எஸ்.சி.சி 779 : [2019] 11 எஸ்.சி.ஆர் 1137**; *அமோல் சிங் -எதிர்- மத்தியபிரதேசம் மாநிலம்* (2008) **5 எஸ்.சி.சி 468 : [2008] 8 எஸ்.சி.ஆர் 956**; *குந்துல பால சுப்ரமணியம் மற்றும் ஒருவர் -எதிர்- ஆந்திரபிரதேசம் மாநிலம்* (1993) **2 எஸ்.சி.சி 684 : [1993] 2 எஸ்.சி.ஆர் 666** – பரிசீலிக்கப்பட்டது.

<u>பார்வையிடப்பட்ட முன்தீர்ப்புகள்</u>

(1998) 9 எஸ்.சி.சி 303	பத்தி 5.3
(1999) 6 எஸ்.சி.சி 545	பத்தி5.3
[1999] 3 (துணை) எஸ்.சி.ஆர் 284	பத்தி5.3
[2008] 1 எஸ்.சி.ஆர் 933	பத்தி 5.3
[2002] 6 எஸ்.சி.சி 710	பத்தி 5.3
[2019] 11 எஸ்.சி.ஆர் 1137	பத்தி 5.3
[2008] 8 எஸ்.சி.ஆர் 956	பத்தி 5.4
[1993] 2 எஸ்.சி.ஆர் 666	பத்தி 5.4
[1976] 2 எஸ்.சி.ஆர் 764	பத்தி 5.4
[1992] 2 எஸ்.சி.ஆர் 197	பத்தி10.1
[1985] 2 எஸ்.சி.ஆர் 621	பத்தி 10.1
(1983) 1 எஸ்.சி.சி 211	பத்தி 10.1
[1958] எஸ்.சி.ஆர் 552	பத்தி 10.2

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : குற்றவியல் மேல்முறையீட்டு எண். 34 /2002.

அலகாபாத் உயர்நீதிமன்ற குற்றவியல் மேல்முறையீட்டு எண்.4658 /2015 ல் 30.05.2020 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து

<u>வழக்குரைஞர்கள்</u>

திருவாளர். கரிமா பிரசாத், எ.எ. ஜி,
திருவாளர். விஷ்ணு சங்கர் ஜெயின்,

-மேல்முறையீட்டாளர்களுக்காக

வழக்குரைஞர்கள்

திருவாளர். பி.எஸ்.குரானா,
திருவாளர். விபுதி சுஷாந்த் குப்தா,
திருவாளர். நரேந்தர் குமார் வர்மா,
-எதிர் மேல்முறையீட்டாளர்களுக்காக

தீர்ப்புரை

தீர்ப்பு வழங்கியவர் நீதியரசர் திரு.எம்.ஆர்.ஷா :

1. எதிர்மனுதார்கள்/அசல் எதிரிகளால் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் மேல்முறையீடு எண்.4658 /2015 ஐ விசாரணை செய்த அலகாபாத் உயர் நீதிமன்ற ஈராயம் அதனை அனுமதித்து 30.05.2020 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவின் மூலம் அவர்களை இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302 உடன் இணைந்த பிரிவு 34 தண்டனையிலிருந்து விடுதலை செய்ததால் திருப்தியடையாமல் மனக்குறைவுற்ற மாநில அரசு சார்பாக இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. தற்போதைய மேல்முறையீட்டுக்கு வழிகோலிய பொருண்மைகளின் சுருக்கம் பின்வருமாறு ,

2.1 20.12.2011 அன்று மதியம் 2:30 மணியளவில், இறந்தவரின் மகள் ராதாவிடமிருந்து அவரது தாய் எரிக்கப்பட்டதாக வந்த அழைப்பின் அடிப்படையில் அ.சா.1 பெங்காலி பாபு அளித்த முதல் தகவல் அறிக்கையின் பேரில் ஆரம்பத்தில் இதச பிரிவு 326 ன் கீழான குற்றத்திற்காக குற்ற எண்.1144/11 பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்ற, அந்த நேரத்தில் எஸ்டிஎம் இறந்தவரின் வாக்குமூலத்தை எடுத்துக்கொண்டிருந்தார். அவரை பொறுத்தவரை, தனது மாமனார் மற்றும் மாமியார் பணம் கேட்டதாகவும், அவர் மறுத்த போது தாக்குதல் நடந்ததாகவும், அதன் பின்னர் அவர்கள் தனது

மீது மண்ணெண்ணெய் ஊற்றி எரியும் தீக்குச்சியால் எரித்தனர் என அப்பெண் கூறினார் என்பதாகும். விசாரணை அதிகாரி விசாரணையை தொடங்கி சம்பந்தப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்து, மருத்துவ சான்றுகள் உள்ளிட்ட தேவையான ஆதாரங்களை சேகரித்தார். விசாரணை முடிந்த பிறகு, புலனாய்வு அதிகாரி குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவு 302 உடன் இணைந்த பிரிவு 34 குற்றங்களுக்காக குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தார். கற்றறிந்த விசாரணை நீதிமன்றம் மேற்கூறிய குற்றங்களுக்காக குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டை வனைந்துள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றச்சாட்டை ஒப்புக்கொள்ளாமல் குற்றத்தை மறுத்துள்ளனர். எனவே, மேற்கூறிய குற்றங்களுக்காக விசாரணை நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர்.

2.2 குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க, அரசுத் தரப்பில் 10 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.5 பிறழ்சாட்சியாக மாறியுள்ளார். அரசு தரப்பில் ஆவண ஆதாரங்களும், இரண்டு மரண வாக்குமூலங்களும் சமர்பிக்கப்பட்டுள்ளது, அதில் ஒன்று காவல் அதிகாரியால் பதிவு செய்யப்பட்டது மற்றொன்று குற்றவியல் நடுவர் /எஸ்டிஎம் ஆல் பதிவு செய்யப்பட்டதாகும். சாட்சியங்களை மதிப்பீடு செய்தும், இரண்டு மரண வாக்குமூலங்களை பரிசீலித்தும், 22.12.2011 அன்று குற்றவியல் நடுவரால் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தை கற்றறிந்த விசாரணை நீதிமன்றம் நம்பியுள்ளது, மேலும் இறந்தவர் தனக்கு தானே மண்ணெண்ணெய் ஊற்றிகொண்டார் என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் முன்வைத்த எதிர்வாதம் நம்பதக்கதல்ல என்று மருத்துவ சான்றுகளை கருத்தில் கொண்டு முடிவு செய்துள்ளது. அதன்பின்னர், கற்றறிந்த விசாரணை நீதிமன்றம், எதிரிகளை இதச பிரிவு 302 உடன் இணைந்த பிரிவு 34 குற்றத்திற்காக தண்டித்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

3. விசாரணை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டனை தீர்ப்பு மற்றும் உத்தரவின் மீது திருப்தியடையாமல் மனக்குறைவுற்று, குற்றம் சாட்டப்பட்டவர்கள் உயர் நீதிமன்றத்தில் குற்றவியல் மேல்முறையீடு எண்.4658/2015 ஐ தாக்கல் செய்துள்ளனர். அதனை விசாரித்த உயர்நீதிமன்றம், தனது எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவின் மூலம் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவித்துள்ளது, அதற்கு முக்கிய காரணமாக 20.12.2011 மற்றும் 22.12.2011 என இரண்டு மரண வாக்குமூலங்கள் உள்ளதாகவும் அந்த இரண்டு மரண வாக்குமூலங்களுக்கும் இடையில் இரண்டு நாட்கள் இடைவெளி இருந்துள்ளாக குறிப்பிட்டுள்ளது. எஸ்.டி.எம்/துணை ஆணையர், ஆக்ரா அவர்களால் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தை நம்புவதற்கு பதிலாக, உயர் நீதிமன்றம், அந்த இரண்டு அறிவிப்புகளையும் நிராகரித்து குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்துள்ளதோடு, இறந்தவரை பொறுத்தவரை அவரிடம் கட்டாயபடுத்தி பணத்தை கேட்டும், அவர் மறுத்ததால், குற்றம் சாட்டப்பட்டவர் அவரை தாக்க முயன்றபோது அவர் ஓடி சென்று மன அழுத்தத்தின் காரணமாக அவர் தன் மீது மண்ணெண்ணை ஊற்றிகொண்டிருக்கலாம் என்று குறிப்பிட்டு குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவித்துள்ளது.

4. இந்திய தண்டனை சட்டம் பிரிவு 302 உடன் இணைந்த பிரிவு 34 குற்றத்திற்காக வழங்கப்பட்ட தண்டனையிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர்களை குறைவுற்ற தீர்ப்பின் மூலம் உயர்நீதிமன்றம் விடுதலை செய்துள்ளதாக அதிருப்தி அடைந்த மாநில அரசு சார்பில் இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் திருவாளர். கரிமா பிரசாத் அவர்கள், வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, இதச பிரிவு 302 உடன் இணைந்த பிரிவு 34 ன் கீழ் உள்ள கடுமையான குற்றங்களிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவித்துள்ளதன் மூலம் உயர்நீதிமன்றம் பெரும் தவறு செய்துவிட்டது என்று கடுமையான வாதத்தை சமர்பித்தார்.

5.1 தகுதிவாய்ந்த நடுவரால் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தை உயர் நீதிமன்றம் நம்பி பரிசீலித்திருக்க வேண்டும் என்று அரசின் சார்பில் ஆஜரான கற்றறிந்த மூத்த வழக்கறிஞரால் மேலும் சமர்பிக்கப்பட்டது.

5.2 சாட்சிய மதிப்பீட்டின் அடிப்படையில், 20.12.2011 அன்று விசாரணை அதிகாரி முன் அளித்த முதல் மரண வாக்குமூலமாக கருதப்படும், வாக்குமூலம் எந்த நம்பிக்கையையும் ஏற்படுத்தவில்லை என்பதற்கு கோர்வையான காரணங்கள் விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது என சமர்ப்பிக்கப்பட்டது. பதிவேட்டில் இருக்கும் ஆதாரங்களை குறிப்பாக மருத்துவ சான்றுகளின் மதிப்பீட்டின் பேரில் கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் மேற்கூறிய தீர்வு பதிவு செய்யப்பட்டதாக சமர்ப்பிக்கப்பட்டது .

5.3 குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 161 ன் கீழ் விசாரணை அதிகாரியிடம் செய்யப்பட்ட வாக்குமூலத்தை காட்டிலும் தகுதிவாய்ந்த குற்றவியல் நடுவரால் பதிவுசெய்யப்பட்ட மரண வாக்குமூலம் உயர்ந்த நிலையில் நிற்கும் என்பதை உயர் நீதிமன்றம் மதிப்பிட்டிருக்க வேண்டும் என்று சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தால்

ரவி சந்தர் மற்றும் பலர் –எதிர்- பஞ்சாப் மாநிலம் (1998) 9 **எஸ்.சி.சி** 303 (பத்தி 6); **ஹர்ஜித் கவுர் –எதிர்- பஞ்சாப் மாநிலம்** (1999) 6 **எஸ்.சி.சி** 545, (பத்தி 6); **கோலி சுனிலால் சாவ்ஜி மற்றும் ஒருவர் –எதிர்- குஜராத் மாநிலம்** (1999) 9 **எஸ்.சி.சி** 562 (பத்தி 8); **விகாஸ் மற்றும் பலர் –எதிர்-மகாராஷ்டிரா மாநிலம்** (2008) 2 **எஸ்.சி.சி** 516 (பத்தி 48); **லக்ஷ்மன் –எதிர்- மகாராஷ்டிரா மாநிலம்** (2002) 6 **எஸ்.சி.சி** 710 **மற்றும் ஜக்பீர் சிங் - எதிர் - மாநிலம் (டெல்லியின் என்.சி.டி)** (2019) 8 **எஸ்.சி.சி** 779 (பத்தி 21) **வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகள் சுட்டிக்காட்டப்பட்டது.**

5.4 தற்போதைய வழக்கை பொறுத்தவரை இரண்டு மரண வாக்கு மூலங்களை நம்ப முடியாது என்றும், இறந்தவரின் பல மரண வாக்கு மூலங்களை நம்புவது பாதுகாப்பானது

அல்ல என்று உயர் நீதிமன்றமானது குறிப்பிட்டு கூறியுள்ளதாக சமர்ப்பிக்கப்பட்டது. எந்தவொரு உறுதிப்படுத்தும் ஆதாரமும் இல்லாத நிலையில், இறந்தவரின் பல மரண அறிக்கைகளை நம்புவது பாதுகாப்பானது அல்ல என்று உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளதாக சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் மேற்குறிப்பிட்ட அத்தகைய கருத்தானது இந்நீதிமன்றத்தால் **அமோல் சிங் - எதிர் - மத்தியபிரதேச மாநிலம்** (2008) 5 **எஸ்.சி.சி.** 468 (பத்தி 13) ; **குண்டுலா பாலசுப்ரமணியம் மற்றும் ஒருவர் - எதிர் - ஆந்திரப் பிரதேச மாநிலம்** (1993) 2 **எஸ்.சி.சி** 684 (பத்தி 18); **முன்னு ராஜா & மற்றும் ஒருவர் - எதிர் - எம்பி மாநிலம்** (1976) 3 **எஸ்.சி.சி** 104 (பத்தி 6) வழக்குகளில் வகுத்துள்ள சட்டத்திற்கு முரணானது என்று சமர்ப்பிக்கப்பட்டது. மேற்கூறிய தீர்ப்புகளில் இந்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது போல், வேறு எந்த உறுதிப்படுத்தும் ஆதாரமும் இல்லாமல், இறந்தவரின் மரண வாக்குமூலத்தின் அடிப்படையில் தண்டனை வழங்கலாம் என்று சமர்ப்பிக்கப்பட்டது.

5.5 தற்போதைய வழக்கில், எந்த ஒரு கோர்வையான காரணமும் இன்றி மரண வாக்குமூலத்தை, குறிப்பாக குற்றவியல் நடுவர்/எஸ்டிஎம்-ஆல் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தை சார்ந்திருக்காமல் உயர்நீதிமன்றம் தவறிவிட்டது என சமர்ப்பிக்கப்பட்டது. 22.12.2011 அன்று வாக்குமூலத்தை பதிவு செய்த நிர்வாக நடுவரின் நம்பகத்தன்மையையோ மற்றும்/அல்லது அவர் தரப்பில் தீங்கிழைக்கும் வகையில் ஏதும் உள்ளதாகவோ உயர் நீதிமன்றம் சந்தேகிக்காத நிலையில் 22.12.2011 அன்று குற்றவியல் நடுவர்/எஸ்டிஎம் ஆல் பதிவுசெய்யப்பட்ட மரண வாக்குமூலத்தை சார்ந்து உயர்நீதிமன்றம் தண்டனையை உறுதி செய்திருக்க வேண்டும் என்று சமர்ப்பிக்கப்பட்டது .

5.6 எனவே, உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவு நிலைக்கத்தக்கதல்ல என்றும், அத்தீர்ப்பு மற்றும் உத்தரவு ரத்து செய்யவும் தள்ளுபடி செய்யப்படுவதற்கு தகுதியுடையது என்றும், இதச பிரிவு 302 உடன் இணைந்த பிரிவு 34 ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்களைக் குற்றவாளி என்று தீர்ப்பளித்து விசாரணை நீதிமன்றத்தால்

வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவு நிலைநிறுத்தப்படுவதற்கு / மீட்டமைக்கப்படுவதற்கு தகுதியானது என்று வாதிடப்பட்டது.

6. தற்போதைய மேல்முறையீட்டை, எதிர்மனுதாரர்கள்/குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பி.எஸ்.குரானா அவர்களால் கடுமையாக எதிர்க்கப்பட்டது. வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், பல மரண வாக்குமூலங்கள் உள்ளதை கருத்தில் கொண்டும் குற்றம் சாட்டப்பட்டவர்களை உயர் நீதிமன்றம் சரியான முறையில் விடுவித்துள்ளது என்று குற்றம் சாட்டப்பட்டவர் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞரால் கடுமையாகச் சமர்ப்பிக்கப்பட்டது.

6.1 உயர் நீதிமன்றத்தால் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது போல், 20.12.2011 அன்று காவல்துறை அதிகாரியால் மரண வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட நிலையில், அதன்பிறகு 22.12.2011 அன்று மற்றொரு மரண வாக்குமூலத்தை பதிவு செய்ய எந்த காரணமும் இல்லை.

6.2 20.12.2011 அன்று பதிவு செய்யப்பட்ட முதல் மரண வாக்குமூலத்தில் மாமனாருக்கு பயந்து தற்கொலை செய்து கொண்டதாகவும், 20.12.2011 தேதியிட்ட முதல் மரண வாக்குமூலத்தில் 1ம் எதிர்மனுதாரரான மாமனார் அவளை அடிப்பதற்காக மட்டுமே துரத்தினார், எரிப்பதற்காக அல்ல என்று குற்றச் செயலில் அவரது பங்கு குறிப்பிடபட்டுள்ளதாகவும், ஆனால், குற்றவியல் நடுவரால் பதிவு செய்த இரண்டாவது மரண வாக்குமூலத்தில் அதற்கு தலைகீழாக மற்ற குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் பாதிக்கப்பட்டவர்/இறந்தநபர் குற்றம் சாட்டியுள்ளார். எனவே 22.12.2011 அன்று குற்றவியல் நடுவர்/எஸ்.டி.எம் ஆல் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தை சார்ந்திருக்க உயர்நீதிமன்றம் சரியான முறையில் மறுத்துள்ளது என சமர்ப்பிக்கப்பட்டது.

6.3 சாட்சியங்களை மதிப்பிட்டதன் பேரில் இறந்தவர் மன ரீதியாக பலவீனமானவர் என உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளதாக சமர்ப்பிக்கப்படுகிறது. எனவே அதுபோன்ற மன

நிலையிலும் மற்றும் பணத்தை தர மறுத்ததால் அடித்து விடுவார் என்ற மாமனாரின் மீதான பயத்தின் காரணமாகவும், அவரே மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கொலை வழக்கு எதுவும் எழாத காரணத்தால் குற்றம் சாட்டப்பட்டவர்களை இதச பிரிவு 302 உடன் இணைந்த பிரிவு 34 ன் கீழ் தண்டிக்கக்கூடிய குற்றச்சாட்டுகளிலிருந்து உயர்நீதிமன்றம் சரியான முறையில் விடுதலை செய்துள்ளது.

7. மேற்கண்ட சமர்ப்பிப்புகளைச் செய்து, தற்போதைய மேல்முறையீட்டை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரப்பட்டது.

8. அந்தந்த தரப்பினர் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்ககளை நாங்கள் நீண்ட நேரம் கேட்டோம்.

9. இவ்வழக்கில் இரண்டு மரண வாக்குமூலங்கள் உள்ளது என்பதை தொடக்கத்திலேயே குறிப்பிடதக்கதாகும். அதில் ஒன்று 20.12.2011 அன்று காவல் அதிகாரியால் பதிவு செய்யப்பட்டது, மற்றொன்று 22.12.2011 அன்று குற்றவியல் நடுவர்/எஸ்.டி.எம் ஆல் பதிவு செய்யப்பட்டது. எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவில் கூட, எந்தவொரு மரண வாக்குமூலமும் நம்பிக்கையைத் தூண்டவில்லை என்று உயர்நீதிமன்றம் குறிப்பாக சுட்டிகாட்டியுள்ளது. 20.12.2011 அன்று காவல் அதிகாரியால் மரண வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட நிலையில், இரண்டாவது மரண வாக்குமூலத்தை பதிவு செய்ய எந்த காரணமும் இல்லை என்ற முதன்மை காரணத்தால் 22.12.2011 அன்று குற்றவியல் நடுவர்/எஸ்டிஎம் ஆல் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தை உயர்நீதிமன்றம் நம்பவில்லை. ஆயினும், இங்கே குறிப்பிடவேண்டிய யாதெனில், 20.12.2011 அன்று காவல் அதிகாரியால் எது பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அது குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 161 ன் படி வாக்குமூலமாகும். எனவே, இறந்தவரின் மரண வாக்குமூலத்தை குற்றவியல் நடுவர் பதிவு செய்வது பொருத்தமானது என்று கருதப்பட்டுள்ளது, அதனால்தான் 22.12.2011 அன்று இறந்தவரின் மரண வாக்குமூலத்தை பதிவு செய்ய எஸ்டிஎம்

அழைக்கப்பட்டுள்ளார். 20.12.2011 அன்று காவல்துறையினரால் பதிவு செய்யப்பட்ட முதல் வாக்குமூலம்/மரண வாக்குமூலம் எந்த நம்பிக்கையையும் ஏற்படுத்தவில்லை என்பதை உயர்நீதிமன்றம் கூட குறிப்பிட்டுச் சொன்னதைத் திரும்பத் திரும்பச் சொல்வதைக் கவனிக்கலாம். இந்த விஷயத்தைப் பொறுத்தவரை, 22.12.2011 அன்று குற்றவியல் நடுவரால் பதிவுசெய்யப்பட்ட மரண அறிக்கை நம்பப்பட வேண்டுமா இல்லையா என்பது பற்றியும் மற்றும் குற்றவியல் நடுவர் / எஸ்டிஎம் ஆல் பதிவு செய்யப்பட்ட அத்தகைய மரண வாக்குமூலத்தின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவரை தண்டிக்கமுடியுமா இல்லையா என்பது பரிசீலிக்க வேண்டியுள்ளது.

9.1 மேற்கூறிய கேள்வி/பிரச்சினையை பரிசீலிக்கும்போது, நடுவரால் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தின் நம்பகத்தன்மை குறித்த இந்த நீதிமன்றத்தின் சில தீர்ப்புகள் குறிப்பிட வேண்டியுள்ளது.

9.1.1 நடுவரால் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தின் நம்பகத்தன்மை குறித்த முந்தைய முடிவுகளை பரிசீலித்த பிறகு, லக்ஷ்மன் (மேலே குறிப்பிட்டுள்ள) வழக்கில், நடுவர் ஆர்வமற்ற சாட்சியாகவும் பொறுப்பான அதிகாரியாகவும் இருந்ததையும், குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக நடுவருக்கு ஏதேனும் விரோதம் இருந்ததாகவோ அல்லது மரண வாக்குமூலத்தை புனைவதில் எந்த வகையிலும் ஆர்வமாக இருந்தார் என்பதாகவோ சந்தேகிக்கக்கூடிய பொருள் அல்லது சூழ்நிலையும் இல்லாத நிலையில் நடுவரால் பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலத்தின் மீது எந்த சந்தேகமும் எழவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

9.1.2 ஜக்பீர் சிங் (மேலே குறிப்பிட்டுள்ள) வழக்கில், இந்த நீதிமன்றம், மரண வாக்குமூலம் மற்றும் பல மரண வாக்குமூலங்கள் தொடர்பான சட்டத்தை விரிவாக பரிசீலிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. இரண்டு/பல்வேறு மரண வாக்குமூலங்கள் இருப்பதால் மட்டுமே அனைத்து மரண வாக்குமூலங்களும் நிராகரிக்கப்படக் கூடாது என்று

உறுதிசெய்யப்பட்டுள்ளது. பல மரண வாக்குமூலங்கள் இருக்கும்போது, ஒவ்வொரு வழக்கின் சங்கதிகளின் அடிப்படையில் வழக்கு முடிவு செய்யப்பட வேண்டும் என்றும், பதிவாகியுள்ள ஆவணம் முழுவதையும் மற்றும் பல்வேறு மரண வாக்குமூலங்கள் ஏற்படுவதற்கான சுற்றியுள்ள சூழ்நிலைகளையும் கவனமாக ஆராயும் கடமையில் இருந்து நீதிமன்றம் விடுவிக்கப்படாது. இறுதியில், பத்தி 32 இல், இந்த நீதிமன்றம் பின்வருமாறு முடிவு செய்துள்ளது:

"பல மரண வாக்குமூலங்கள் பற்றிய எங்கள் முடிவு

> 32. இந்த நீதிமன்றத்தால் வகுக்கப்பட்ட சட்டத்தின் அடிப்படையில், ஒன்றுக்கு மேற்பட்ட மரண வாக்குமூலங்கள் இருக்கும்போது, முன்னதான மரண வாக்குமூலத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் பிணைக்கப்படவில்லை, ஆனால் பின்னரான மரண வாக்குமூலத்தில், அதற்கு தலைகீழான ஒரு நிலை இறந்தவரால் எடுக்கப்படும்போது, ஒவ்வொரு வழக்கும் அதன் சங்கதிகளின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். பதிவாகியுள்ள ஆவணம் முழுவதையும் மற்றும் வெவ்வேறு மரண வாக்குமூலங்கள் ஏற்படுவதற்கான சுற்றியுள்ள சூழ்நிலைகளையும் கவனமாக ஆராயும் கடமையிலிருந்து நீதிமன்றம் விடுவிக்கப்படாது. குற்றஞ்சாட்டும் மரண வாக்குமூலம் உண்மை நிலையை வெளிக்கொணர்கிறது என்றும், அதனுடன், குறிப்பாக, அத்தகைய வாக்குமூலத்தை ஏற்படுத்த இறந்தவரின் தகுநிலை, தன்னார்வத்துடன் அது செய்யப்பட்டது என்று நீதிமன்றம் கண்டால், அதன்படியே இயங்கும். மேலும், பயிற்றுவித்தல் மற்றும் தூண்டுதல் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட மரண வாக்குமூலத்தின் உள்ளடக்கங்களை ஆதரிக்கும் பிற சான்றுகளை நிராகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை. சமமாக, முந்தைய மரண வாக்குமூலத்தை வழங்கியதற்கான சூழ்நிலைகள் ஏற்றுக்கொள்ள தகுதியானது அல்லது தகுதியற்றது என்றும் பரிசீலிக்கலாம்.

ரவி சந்தர் மற்றும் பலர் (மேலே குறிப்பிட்டுள்ள), **ஹர்ஜித் கவுர்** (மேலே குறிப்பிட்டுள்ள), **கோலி சுனிலால் சாவ்ஜி மற்றும் ஒருவர்** (மேலே குறிப்பிட்டுள்ள) மற்றும் **விகாஸ் & பலர்**.

(மேலே குறிப்பிட்டுள்ள), **ஹர்ஜித் கவுர்** (மேலே குறிப்பிட்டுள்ள), **கோலி சுனிலால் சாவ்ஜி & ஒருவர்** (மேலே குறிப்பிட்டுள்ள) மற்றும் **விகாஸ் மற்றும் பலர்** (மேலே குறிப்பிட்டுள்ள) வழக்கிலும் இதே போன்ற கருத்துக்கள் இந்த நீதிமன்றத்தால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

10. மேற்கூறிய தீர்ப்புகளில் இந்நீதிமன்றம் வகுத்துள்ள சட்டத்தை கையிலுள்ள இவ்வழக்கின் சங்கதிகளுடன் பொருத்தி பார்க்கையில், 22.12.2011 அன்று குற்றவியல் நடுவரால் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தை நம்ப வேண்டுமா இல்லையா என்பதை பரிசீலிக்க வேண்டியுள்ளது. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மரண வாக்குமூலத்தை பதிவு செய்வதில் சார்புடையவராகவோ அல்லது ஆர்வமாகவோ இருந்ததாகவோ குற்றவியல் நடுவர்/எஸ்டிஎம்-க்கு எதிராக எந்தவித புகாரும் பதிவு செய்யப்படவில்லை. விசாரணையின் போது அவர் அழைக்கப்பட்டுள்ளார் மற்றும் புலன் விசாரணையின் போது அவர் இறந்தவரின் மரண வாக்குமூலம் மற்றும் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். உயர்நீதிமன்றமும் கூட குற்றவியல் நடுவர்/எஸ்டிஎம் தீங்கிழைக்கும் அடிப்படையில் மரண வாக்குமூலத்தை பதிவு செய்தார் என்ற வகையில் அதன் நம்பகத்தன்மையை சந்தேகிக்கவில்லை. குற்றவியல் நடுவர்/எஸ்டிஎம் பதிவு செய்த மரண வாக்குமூலத்தை நம்பாமல் இருந்ததற்கு உயர்நீதிமன்றம் கூறியுள்ள காரணம் உகந்தது அல்ல, அதை ஏற்க முடியாது. 22.12.2011 அன்று நடுவரால் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தை சந்தேகிக்க எந்த காரணமும் இல்லை. அதில், காலை 11:00 மணியளவில் பணம் கேட்பதில் ஏற்பட்ட பகை காரணமாக, எதிர் மனுதாரர்கள் / குற்றம் சாட்டப்பட்டவர்கள் இறந்தவர் மீது மண்ணெண்ணெய் ஊற்றி எரித்ததாக இறந்தவர் குறிப்பிட்டு கூறியுள்ளார். எனவே 22.12.2011 அன்று குற்றவியல் நடுவரால் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர்கள்/குற்றம் சாட்டப்பட்டவர்கள் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளனர், மற்றும் இறந்தவர் மீது மண்ணெண்ணெய் ஊற்றியதாக குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது. இந்த நிலையில், 20.12.2011 அன்று விசாரணை அதிகாரியால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தில்,

மாமனார் பணம் கேட்டு தடியால் அடிக்க தொடங்கியதால், இறந்தவர் ஓடிப்போய் உள்பக்கமாக கதவை பூட்டிகொண்டார் என்றும், கோபத்தின் காரணமாக அறையிலிருந்த மண்ணெண்ணெயை ஊற்றி தனக்கு தானே எரித்துக்கொண்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை பொறுத்தவரை, மருத்துவ சாட்சியங்களை பரிசீலிக்கையில், 20.12.2011 அன்று காவல் அதிகாரியால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம்/மரண வாக்குமூலம் எந்தவொரு நம்பகத்தன்மையும் ஏற்படுத்தவில்லை. மருத்துவ சாட்சியும் மேற்படி மரண வாக்குமூலத்திற்கு எந்த வகையிலும் துணை புரியவில்லை. குற்றம் சாட்டப்பட்டவரின் கூற்றுப்படி, மாமனார் அவளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் என்பது கவனிக்கத்தக்கது. இறந்தவரின் முதல் மரண வாக்குமூலத்தில் உள்ள வாசங்களின் படி இறந்தவர் கதவை உள்ளே இருந்து பூட்டிகொண்டு கோபத்தில் மண்ணெண்ணெய் ஊற்றி கொண்டதாக உள்ளதை ஏற்றுக்கொண்டால், மாமனார்/குற்றம் சாட்டப்பட்டவரால் கதவு உடைக்கப்பட்டோ/திறக்கப்பட்டோ இறந்தவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார் என்பது பற்றி எந்தவொரு குறிப்பும் இல்லாத நிலையில், அவர் எப்படி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் விளக்கப்படவில்லை. மருத்துவ சான்றுகள் மற்றும் இறந்தவருக்கு ஏற்பட்ட காயங்களை கருத்தில் கொண்டாலும், இறந்தவருக்கு தலை மற்றும் பின்புற காயங்கள் மட்டுமே காணப்பட்டன, மார்பில் எந்த காயமும் இல்லை. விசாரணை நீதிமன்றம் சரியாக குறிப்பிட்டுள்ளது போல், இறந்தவர் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டிருந்தால் அவரது நெஞ்சில் காயங்கள் இருந்திருக்கும், அதோடு தலையிலும் பின்பக்கத்திலும் காயங்கள் இருந்திருக்காது. எங்கள் பார்வையில், இறந்தவரின் உடலில் காணப்படும் இத்தகைய காயங்கள் இறந்தவரின் பின்னால் இருந்து யாராவது மண்ணெண்ணெய் ஊற்றினால் மட்டுமே சாத்தியமாகும். மேற்கூறிய அம்சம் உயர்நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்படவில்லை.

10.1 இப்போது, வேறு எந்தவொரு உறுதிபடுத்தும் ஆதாரமும் இல்லாவிட்டாலும், மரண வாக்குமூலத்தை மட்டுமே நம்பி ஒரு தண்டனை வழங்க முடியுமா, என்பதை பொறுத்த வரையில் **முன்னு ராஜா மற்றும் ஒருவர்** (மேலே குறிப்பிட்டுள்ள) மற்றும் அதனை தொடர்ந்து **திருமதி.பானிபென் -எதிர்-குஜராத் மாநிலம்** (1992) 2 **எஸ்.சி.சி** 474 வழக்கில் இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை குறிப்பிட வேண்டியுள்ளது. மேற்கூறிய முடிவுகளில், ஒரு மரண வாக்குமூலம் வேறு உறுதிப்படுத்தும் சாட்சியம் இல்லாமல் செயல்பட முடியாது என்று எந்தவொரு சட்டவிதியோ, மதிநுட்பமோ இல்லை என்று குறிப்பாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. மரண வாக்குமூலம் உண்மையானது மற்றும் தன்னார்வமானது என்று நீதிமன்றம் திருப்தி அடைந்தால், அது உறுதிப்படுத்தப்படாமல், அதன் அடிப்படையில் தண்டனை வழங்கலாம். இந்த கருத்து **உத்தரபிரதேச மாநிலம் எதிர் -ராம் சாகர் யாதவ் மற்றும் பலர்** (1985) 1 **எஸ்சிசி** 552 **மற்றும் ரமாவதி தேவி எதிர் பீகார் மாநிலம்** (1983) 1 **எஸ்சிசி** 211 வழக்குகளிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, வேறு சாட்சித்தின் மூலம் உறுதிப்படுத்தப்படாத மரண வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டுமே தண்டனை வழங்கலாம்.

10.2 **குஷால் ராவ் எதிர் பம்பாய் மாநிலம், ஏஐஆர் 1958 எஸ்சி 22 : 1958 எஸ்சி** 552-ல் வழங்கப்பட்ட தீர்ப்பு மரண வாக்குமூலத்தின் ஆதார மதிப்பு பற்றிய சட்டத்தின் மீதான ஒரு மைல்கல் தீர்ப்பாகும். எந்த சூழ்நிலையில் மரண வாக்குமூலத்தை உறுதிப்படுத்தாமல் ஏற்றுக்கொள்ளலாம் என்பதற்கான பின்வரும் கொள்கைகளை இந்த நீதிமன்றம் வகுத்துள்ளது.

> "16. சாட்சியச் சட்டம் தொடர்புடைய விதிகளின் மறுஆய்விலும், மற்றும் இந்தியாவில் உள்ள பல்வேறு உயர் நீதிமன்றங்களிலும், இந்த நீதிமன்றத்திலும் தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளிலும், மேலே குறிப்பிட்டுள்ள சென்னை உயர் நீதிமன்றத்தின் முழு ஆயத்தின் கருத்துடன் உடன்பட்டு நாங்கள் முடிவிற்கு வந்துள்ளோம். (1) ஒரு

மரண வாக்குமூலம், உறுதிப்படுத்தப்படாதவரை, தண்டனைக்கான தனி ஆதாரமாக அமையாது என ஒரு முழுமையான சட்ட விதியாக குறிப்பிடமுடியாது என்றும்; (2) ஒவ்வொரு வழக்கும் அதன் சொந்த சங்கதிகளுடன், மரண வாக்குமூலம் செய்யப்பட்ட சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும்; (3) மற்ற ஆதாரங்களை விட மரண வாக்குமூலம் ஒரு பலவீனமான ஆதாரம் என்று ஒரு பொதுவான முன்மொழிவாக வைக்க முடியாது எனவும்; (4) ஒரு மரண வாக்குமூலம் மற்ற சாட்சியத்திற்கு ஈடான அதே நிலையில் நிற்கும், சாட்சியங்களை அளவிட உருவாக்கப்பட்டுள்ள கொள்கைகளின் அடிப்படையில், அதனை சுற்றியுள்ள சூழ்நிலைகளின் அடிப்படையில் அது தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும்; (5) ஒரு தகுதிவாய்ந்த குற்றவியல் நடுவரால் சரியான முறையில், அதாவது கேள்விகள் மற்றும் பதில்கள் வடிவில், மற்றும் கூடிய வரை, வாக்குமூலத்தை அளிப்பவரின் வார்த்தைகளில் பதிவுசெய்யப்பட்ட ஒரு மரண வாக்குமூலமானது, மனித நினைவகம் மற்றும் மனித குணநலன்களின் அனைத்து குறைபாடுகளாலும் பாதிக்கப்படக்கூடிய வாய்வழி சாட்சியத்தை சார்ந்து இருக்கும் மரண வாக்குமூலத்தை விட மிக உயர்ந்த நிலையில் உள்ளது எனவும்; மேலும் (6) மரண வாக்குமூலத்தின் நம்பகத்தன்மையை சோதிக்க, இறக்கும் மனிதனின் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு போன்ற சூழ்நிலைகளை நீதிமன்றம் கவனத்தில் கொள்ள வேண்டும், எடுத்துக்காட்டாக, குற்றம் இரவில் நடந்திருந்தால் போதுமான வெளிச்சம் இருந்ததா; கூறப்பட்ட உண்மைகளை நினைவில் வைத்துக் கொள்ளும் மனிதனின் திறன், அவர் வாக்குமூலத்தை அளிக்கும்போது அவரது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளால் பலவீனம் அடையவில்லையா; அதிகாரபூர்வ பதிவைத் தவிர, ஒரு மரண வாக்குமூலம் அளிக்க அவருக்கு பல வாய்ப்புகள் இருந்திருந்தால், அந்த வாக்குமூலம் முழுவதும் ஒத்தவாறு இருந்திருக்கும் எனவும்; மற்றும் இந்த வாக்குமூலம்

ஆரம்ப சந்தர்ப்பத்தில் செய்யப்பட்டது மற்றும் ஆர்வமுள்ள தரப்பினர் சொல்லிக் கொடுத்ததன் விளைவாக இல்லை."

மேற்கூறிய வழக்கின் தொடர்புடைய உண்மைகள் என்னவென்றால், அதில் இறந்தவர் இரண்டு மணி நேரத்திற்குள் அடுத்தடுத்து மூன்று மரண வாக்குமூலங்களை அளித்துள்ளார். அவை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு ஒன்றுக்கொன்று முரணானவை. இருப்பினும், மூன்று மரண அறிவிப்புகளிலும் பொதுவான அம்சமாக, குஷால் ராவ் மற்றும் துக்காராம் ஆகிய இரு நபர்களால் வாள் மற்றும் ஈட்டிகளால் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. உடலின் பல்வேறு பாகங்களில் துளையிடப்பட்ட மற்றும் கீறப்பட்ட காயங்களை வெளிப்படுத்தும் மருத்துவ சான்றுகளுடன் அனைத்து மரண வாக்குமூலங்களிலும் உள்ள பொதுவான அம்சம் ஒத்துப்போவதால், அந்த மூன்று மரண வாக்குமூலங்களிலும் பெயர் குறிப்பிட்டுள்ள எதிரிகளை தண்டிப்பதற்கு அந்த வாக்குமூலங்களை எடுத்துக்கொள்ளலாம் என்று இந்நீதிமன்றம் கூறியது.

மேற்படி வழக்கின் கூறப்பட்ட சங்கதிகளை தற்போதைய வழக்கின் சங்கதிகளுடன் தொடர்புபடுத்துகையில், கு.ந.மு.ச. பிரிவு 161 இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலத்தில் குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர் இறந்த நபரால் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றாலும், இறந்தவரது மரண வாக்குமூலத்தில் தீயிட்டு கொளுத்தியதாக அவரது பெயர் இடம் பெற்றுள்ளதை நாங்கள் கவனித்தோம். கு.ந.மு.ச. பிரிவு 161 இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலத்திலும், தன்னைக் கொல்லும் நோக்கத்தில் தனது மாமனார் தன்னைக் கட்டையால் தாக்கியதாகவும், அதன் விளைவாக, அறைக்குள் தன்னைப் பூட்டிக்கொண்டு தீக்குளித்ததாகவும் இறந்தவர் கூறியுள்ளார். எனவே, இறந்தவரின் வாக்குமூலத்தில், குற்றம் சாட்டப்பட்ட எதிரி/எதிர்மனுதாரர்களால் அவர் தாக்கப்பட்டார் என்ற பொதுவான ஒன்று இயங்குவதைக் காண்கிறோம். மேலும், மார்பு, அடிவயிறு மற்றும் பின்புறம் தவிர உடலின் அனைத்து பாகங்களிலும் தீக்காயங்கள் இருந்ததை வெளிப்படுத்தும் மருத்துவ

சான்றுகளுடன் இறந்தவர் அளித்த மரண வாக்குமூலம் ஒத்துப்போவதையும் நாங்கள் காண்கிறோம். அத்தகைய பாகங்களில் உள்ள தீக்காயங்கள் இறந்தவரைத் தவிர வேறு ஒருவர் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்ததன் விளைவாக மட்டுமே ஏற்பட கூடியதாகும். ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, இறந்தவர் தன்னைத்தானே தீ வைத்துக்கொண்டால், அவரது மார்பு எரிந்திருக்க வேண்டும். மேற்கூறிய விவாதம் மற்றும் **குஷால் ராவ்** (மேற்படி) வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் மருத்துவச் சான்றுகள் மரண வாக்குமூலத்துடன் ஒத்துப்போவதைக் காண்கிறோம், இதன் மூலம் இந்நீதிமன்றம் மரண வாக்குமூலத்தின் மீது நம்பிக்கை வைக்க அனுமதிக்கிறது.

இறந்தவரின் மரண வாக்குமூலத்தில் வைக்கப்பட வேண்டிய அளவு மற்றும் நம்பகத்தன்மை குறித்து விசாரணை நீதிமன்றம் சரியாகக் கவனித்துள்ளது. இறந்தவரின் மரண வாக்குமூலத்தை உயர் நீதிமன்றம் புறக்கணிக்க எந்த காரணமும் இல்லை. உட்கோட்ட நடுவர் (எஸ்.டி.எம்) பால் கிஷன் அகர்வாலிடம் இறந்தவரால் மரண வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது, இவர் விசாரணை நீதிமன்றத்தில் ஒரு அரசு தரப்பு சாட்சியாகவும் (அ.சா.6) விசாரிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இறந்து போனவர் வாக்குமூலத்தை அளிக்கும் போது, முழு நினைவோடு இருந்ததாகவும், வாக்குமூலம் பதிவு செய்த அதிகாரி முன்வைத்த கேள்விகளைப் புரிந்துகொள்ளும் திறன் கொண்டவராகவும் இருந்தார் என்பதை அவரது அறிக்கை வெளிப்படுத்துகிறது. இறந்தவர் முழு சுயநினைவுடன் இருந்ததாக, இறப்பதற்கு முன் அவருக்கு சிகிச்சை அளித்து வந்த மருத்துவரின் சான்றிதழுடன் உள்ளதால் மரண வாக்குமூலத்தின் சாட்சிய மதிப்பு மேலும் அதிகரிக்கிறது. அத்தகைய வாக்குமூலத்தை அளிக்கும் போது இறந்தவரின் உடல்நிலை குறித்து மருத்துவர் அளித்த அறிக்கைகளை கருத்தில் கொண்டு, விசாரணை நீதிமன்றம் மரண வாக்குமூலத்தை சரியாக நம்பியுள்ளது. தீய எண்ணத்தால் தூண்டப்படமுடியாத தனிப்பட்ட

சாட்சிகளான எஸ்.டி.எம் நடுவர் மற்றும் மருத்துவரின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை மேலும் வலுப்படுத்தியுள்ளதாக விசாரணை நீதிமன்றம் சரியாக குறிப்பிட்டுள்ளது.

11. எனவே, 22.12.2011 அன்று எஸ்.டி.எம்/ குற்றவியல் நடுவர் பதிவு செய்த மரண வாக்குமூலத்தை கருத்தில் கொண்டு, குற்றம் சாட்டப்பட்டவர்கள் எதற்காக அவர்கள் விசாரிக்கப்பட்டார்களோ அதற்காக தண்டிக்கப்படலாம். எனவே, குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிப்பதில் உயர்நீதிமன்றம் பெரும் தவறு செய்துவிட்டது என்பது எங்கள் கருத்து. இதச பிரிவு 302 உடன் இணைந்த பிரிவு 34 ன் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களுக்காக குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவித்து உயர்நீதிமன்றம் வழங்கிய எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவு நீடிக்க முடியாதது, மேலும் இது ரத்து செய்யப்படுவதற்கும், நீக்கரவு செய்யப்படுவதற்கும் தகுதியானது.

12. மேற்கூறியவை மற்றும் மேலே கூறப்பட்ட காரணங்களுக்காக, இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. இதச பிரிவு 302 உடன் இணைந்த பிரிவு 34 ன் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களுக்காக குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிக்கும் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவு இதனால் ரத்து செய்யப்பட்டு நீக்கரவு செய்யப்படுகிறது. இதச பிரிவு 302 உடன் இணைந்த பிரிவு 34 ன் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களுக்காக குற்றம் சாட்டப்பட்டவர்களை குற்றவாளி என்று கற்றறிந்த விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும் உத்தரவும் இதன் மூலம் மீட்டெடுக்கப்படுகிறது. 1வது மற்றும் 2வது எதிர்மனுதாரர்கள்/எதிரிகள் இதச பிரிவு 302 உடன் இணைந்த பிரிவு 34 ன் படி தண்டனைக்குரிய குற்றங்களுக்காக குற்றவாளிகள் என முடிவு செய்து விசாரணை நீதிமன்றம் வழங்கியபடி அவர்களுக்கு ஆயுள் தண்டனையும் மற்றும் ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/ அபராதமும் விதிக்கப்படுகிறது. ஆயுள் தண்டனை அனுபவிப்பதற்காக சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திலோ அல்லது சிறை அதிகாரிகளிடமோ குற்றம்

சாட்டப்பட்டவர்கள் உடனடியாக சரணடைய வேண்டும். இந்த மேல்முறையீடு மேற்குறிப்பிட்ட அளவிற்கு அனுமதிக்கப்படுகிறது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."